Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 5th & 6th of Every month

| | |
|---|---|
| Regd. No.<br>TN / CC (S) DN / 119 / 06-08 | Lincensed to Post without prepayment<br>WPP No. TN / CC (S) DN / 51 / 06-08 |

மேரு : 14 செப்டம்பர் 2008 கானம் : 2



Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No. 2, Old No. 24, Nataji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083. and Printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar.

Related Websites : www.madhuramurali.org / www.namadwaar.org
E-mail : contact@madhuramurali.org; publications @madhuramurali.org

NO FAME · NO SELF INTEREST · ONLY GOD · NO NAME

மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

Rs.10/-

# மதுரமுரளி

## தெய்வீக மாதப் பத்திரிகை



| மேரு : 14 | அக்டோபர் 2008 | கானம் : 3 |
|---|---|---|

www.madhuramurali.org / www.namadwaar.org



ராதா கல்யாணம் 30.08.2008



கோவிந்த பட்டாபிஷேகம் 26.08.2008



ஏகாதசி மாலை - கருட வாகனம் 27.08.2008



உற்சவத்தில் ஒரு நாள் மதியம் ஸ்ரீமத் பாகவதம் உபன்யாசம்

## ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் நிகழ்ச்சி நிரல்

| தேதி/நேரம் | நிகழ்ச்சி |
|---|---|
| அக்டோபர் 9 | புரட்டாசி சரவணம்– ப்ரேமிக பவன ஸ்ரீநிவாஸ பெருமாள் அவதார உத்சவம் |
| அக்டோபர் 11,25 | ஏகாதசி – மதுரபுரி ஆஸ்ரமம் |
| அக்டோபர் 29 | ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் திருநக்ஷத்திரம் |

**திங்கள் முதல் வெள்ளி வரை தினமும் மாலை 6 முதல் 6.30வரை ஸ்ரீஸ்வாமிஜி விஜய் டிவியில் "பக்தி கதைகள்" தலைப்பில் பேசி வருகிறார். இதன் மறு ஒளிபரப்பை மறுநாள் காலை 5.30 மணி முதல் 6மணி வரை காணலாம்.**

**தங்களின் நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கும் மதுரமுரளி பற்றி தெரிவித்து அவர்களும் பயனடைய செய்யுங்களேன்!**

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : 044-2489 5875,
Email : contact@namadwaar.org, contact@madhuramurali.org
என்னும் முகவரிக்கு அனுப்பவும்.

ஸ்ரீ ஹரி:
மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

"ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே"

வேணு : 14 அக்டோபர் 2008 கானம் : 3

- Published by V.Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, Chennai - 83.
- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this Magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the Publisher of Madhuramurali.
- Views expressed in Articles are those of the respective authors and do not reflect the views of the magazine.

## இந்த இதழில் ...

| | |
|---|---|
| மூல முதல்வனாகி நின்றோனே! | 02 |
| மதுரமான மஹநீயர் – 152 | 03 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள் | 06 |
| பாகவத பழம் | 09 |
| க்ருஷ்ண ஜயந்தி மஹோத்சவம் | 13 |
| ஆலய வழிபாடு | 18 |
| பாலகர்களுக்கு ஒரு கதை | 21 |
| ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் | 24 |
| மாலே மணிவண்ணா – 65 | 27 |
| அக்ஷரமணமாலை | 29 |

- Advertisements in Madhuramurali are invited.
- We request all subscribers to renew subscriptions promptly
- Subscribers are requested to extend the benefit of Satsangham to your friends/relatives by introducing them to "Madhuramurali"
- For details please call +91-44-24895875

## மூல முதல்வனாகி நின்றோனே!

– கச்சியப்ப நம்பி

இருள்நிறை மனக் குகையில்
இருதாள் தனை அமர்த்தி
மருள் நீக்கி அருள்புரியும்
மலரடி தனை யுடையோனே!

முப்புறம் தனை எரித்த
முக்கண்ணன் செயல் போலே
முன்வினை தனை எரிக்கும்
முகக் கண்மலர் கொண்டோனே!

இக பர வாழ்வுதனில்
அகம் புறம் இரண்டினிலும்
வரும் பகை காக்கவேண்டி
இருகரம் தனை யுடையோனே!

முண்டகம் தனில் அமர்ந்து
மும்மலம் எனில் நீக்க
முத்தொழில் தனைப் புரியும்
மூல முதல்வனாகி நின்றோனே!

குறையுடையோன் குறை நீக்கி
குறையில்லா வாழ்வு தர
"முரளீதரன்" பெயர் கொண்டு
குருவாகி வந்தோனே!!!



SIGN★A★RAMA
WHERE THE WORLD GOES FOR SIGNS
FULL SERVICE SIGN CENTER



- Dimension Letters
- Banners
- Digital Printing
- Window Lettering
- Magnetic Signs
- Illuminated Signs
- Exterior Signs
- Vehicle Wraps
- Directional Signs
- NEON/LED Signs
- Trade Show Signs
- ACP Signs
- Channel Letters
- Engraved Signs
- And Much More!

OVER 850 LOCATIONS WORLDWIDE
CHENNAI
(044) 2848 2332
23/35 West Cott Road, Next to Royapettah Hospital, Chennai - 600 014.
Chennai-600014@signarama.co.in
www.signarama.co.in
Franchise Opportunities Available Ph:044-4221 8441
SEE OUR ADVT UNDER SIGNS - B2B

ஆக பார்வையினால் அருள் பெறுவது மற்ற இரண்டு விதமான அருளை காட்டிலும் சாத்தியமான ஒன்று என்பதினால் நோக்கியே என்பதை முதலில் சொன்னார். அது மட்டுமில்லாமல் பல பக்தர்கள் பகவானை நோக்கி பாடும்பொழுது "உனது கடைக்கண்ணால் அருள் செய்" என பாடியுள்ளனர்.ஆகையினாலும் நோக்கியே எனும் பதம் முதலில் வருவது விசேஷம் பெறுகிறது.

பல பக்தர்கள் பகவானை நோக்கி பாடும்பொழுது "உனது கடைக்கண்ணால் அருள் செய்" என பாடியுள்ளனர். ஆகையினாலும் நோக்கியே எனும் பதம் முதலில் வருவது விசேஷம் பெறுகிறது.

'நோக்கியே' – பார்வையினாலேயே பகவான் ரமண மஹரிஷிகள் தனது பக்தர்கள் பலருக்கு பெரிய அருள் செய்துள்ளார். முருகனார் எனும் மிகச் சிறந்த பக்தர் ரமணரிடம் இருந்தார். இவர் பகவான் ரமணர் மேல் திருவாசகத்துக்கு இணையாக பாடல்கள் இயற்றி உள்ளார். ஆசுகவி. ரமணரின் உபதேசங்களை தெளிவாக கற்றவர். இவர் ஒருமுறை ரமண மஹரிஷிகளுடன் அண்ணாமலையில் காட்டிற்குள் தனியே சென்றுவிட்டார். இவரை பகவான் அருகில் அமர்த்தி, தனது கண்களினால் இவரை உற்றுநோக்கியவண்ணம் இருந்தார். சிறிது நேரத்தில் புறஉணர்வை இழந்து மிகவும் உயர்ந்த சமாதி நிலைக்கு சென்றுவிட்டார் முருகனார். மாலைதான் அவருக்கு இந்த தியானம் கலைந்தது.

(தொடரும்)

**'தீ' சிறியதாக இருந்தால் பெருங்காற்று அதை அழித்துவிடும். அதே தீ சற்று பெரிய அளவில் இருந்தால் பெருங்காற்று அதை அதிக அளவில் வளர்த்து விடும். அதுபோல் தன்னம்பிக்கை குறைவாக இருந்தால் எதிர்ப்புகள் உன்னை அழித்துவிடும். தன்னம்பிக்கை அதிகமாக இருந்தால் எதிர்ப்புகள் உன்னை வளர்த்துவிடும்.**

**-ஸ்ரீஸ்வாமிஜி**



# மதுரமான மஹநீயர் – 152

(Dr. ஆ.பாக்யநாதன்)

2004–ம் வருடம் தமிழ்நாட்டில் பருவகாலம் பொழுது மழை பெய்யவில்லை. அதோடு மட்டும் அல்லாமல் சென்னையிலும் மழையே இல்லை. அந்த நேரத்தில் பலர் ஸ்ரீஸ்வாமிஜியை அணுகி, "மழையே இல்லையே! என்ன செய்யலாம் ?" என்று வருத்தத்துடன் ஆலோசனை கேட்டார்கள். அதைக் கேட்ட ஸ்ரீஸ்வாமிஜி 'நாற்பத்து எட்டு நாட்கள் அதாவது ஒரு மண்டலமாக யோகிராம்சுரத்குமாரின் குரு நாமகீர்த்தனம் செய்யுங்கள், மழை வரும்' என்றார். அதன்படி குரு நாமகீர்த்தன மண்டல வேள்வி ஆரம்பிக்கப்பட்டு, குருநாதருடைய பக்தர்களின் வீடுகள் ஒவ்வொன்றிலும், தினந்தோறும் நடத்தப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டது. தினமும் அந்த அந்த பகுதியில் உள்ள ஏராளமான பக்தர்களும் கலந்து கொண்டார்கள்.

மதுரையில் ராஜீ செட்டியாரும், மதுரை பக்தர்களின் துணையுடன் அங்கும் இந்த வேள்வியை நடத்தினார். பகவானின் கருணையால் பூர்த்திக்கு பிறகு, ஆங்காங்கு மழை பெய்ய ஆரம்பித்து, பிறகு தமிழ்நாடு முழுவதும் நல்ல மழை பெய்தது.

நங்கநல்லூரிலும் நம் குருநாதரின் பக்தர்கள் 'ஹரே ராம' மஹா மந்திரத்தை ஸப்தாஹ கீர்த்தனமாக நடத்தினார்கள். அதன் பூர்த்தியில் கலந்து கொண்டு பேசிய ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் சிரித்துக்கொண்டு விளையாட்டாக, "நங்கநல்லூரில் நடந்த நாமகீர்த்தனையின் பலனாக தமிழ்நாடு முழுவதும் மழை பெய்யும். சந்தேகமில்லை. ஆனால் நங்கநல்லூரில் சற்றே அதிகம் பெய்ய வேண்டும்" என்றார். அதை மெய்ப்பிப்பது போல் நங்கநல்லூரில் கனத்த மழை பெய்தது. ஒருபுறம் பலன் கிடைத்து விட்டாலும் கூட, நாமகீர்த்தனத்தில் ருசி கண்ட பக்தர்கள், இதை விடக்கூடாது என்று முடிவு செய்து பிரதி வருடமும் நடத்த ஆரம்பித்தார்கள். இதற்கான பொறுப்பை பக்தர் கபீர்தாஸ் ஏற்றுக் கொண்டார். பெயருக்கு ஏற்றார்போல் அவருக்கு குருபக்தியும் அதிகம். நாமருசியும் அதிகம். தன்னுடைய வியாபார வேலைகளுக்கு நடுவே இதன் பொறுப்பை ஏற்று அன்றன்று அந்த பக்தர்களின் வீடுகளுக்கு தானே சென்று நாமகீர்த்தனத்தை ஆரம்பித்து வைத்து மிகவும் சிரத்தையுடன் நடத்தினார்.

இந்த வருடம்(2008) இன்னும் குரு மண்டல வேள்வியை ஆரம்பிக்கவில்லையே என்று தனக்குள்ளாகவே ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் சிந்தித்துக் கொண்டிருந்தார். ஒரு உள் உணர்வு "இந்த வருடம் அதை திருவண்ணாமலை பகவான் யோகிராம்சுரத்குமார் ஆஸ்ரமத்திலேயே நடத்த வேண்டும்" என்று உணர்த்தியது. ஸ்ரீஸ்வாமிஜியும் அந்த எண்ணத்தை எவ்வளவோ புறக்கணித்தும் மீண்டும் மீண்டும் அப்படியே வர, "சரி இது தெய்வ ஸங்கல்பம் என்று புரிந்து கொண்டார்கள். இப்படி நினைத்துக் கொண்டிருக்கும்பொழுதே, பக்தர் கபீர்தாஸ் வந்தார். தாம் நினைப்பதற்கும், கபீர் வருவதற்கும் சரியாக அமைந்ததை கண்டு ஸ்ரீஸ்வாமிஜி தனக்குள்ளாகவே வியந்தார். வந்த கபீர்தாஸரும் ஸ்ரீஸ்வாமிஜியிடம், இந்த வருடம் குரு நாம கீர்த்தன மண்டல வேள்வியை பற்றி ஒன்றும் சொல்லவில்லையே என்றார். ஸ்ரீஸ்வாமிஜியும் திருவண்ணாமலை ஆஸ்ரமத்தில் நடத்த வேண்டும் என்ற தனது அவாவை தெரிவித்தார். அவ்வளவுதான், உடனே கபீர்தாஸ் திருவண்ணாமலை ஆஸ்ரமத்தின் ஆன்மீக வாரிசு ஜஸ்டிஸ் அருணாச்சலம் அவர்களிடம் விஷயத்தை தெரிவித்தார். அவரும் ஆனந்தப்பட்டு உடனே சம்மதம் தெரிவிக்க, தேதி தீர்மானிக்கப்பட்டு பத்திரிகைகள் அடிக்கப்பட்டன. நாமகீர்த்தனம் ஆரம்பித்து நடந்த நாற்பத்து எட்டு நாட்களும் ஆஸ்ரமத்தில் கோலாஹலம்தான்.

*இதன் பலனாக வறுமை அழியட்டும்! இல்லாமை, இல்லாமை ஆகட்டும், வன்முறை ஒழியட்டும், மனித நேயம் வளரட்டும், ஒற்றுமை ஓங்கட்டும், தெய்வீகம் எழுச்சி அடையட்டும், எங்கும் சாந்தி நிலவட்டும்.*

தினமும் அகண்ட நாமமும், அதற்குப் பிறகு ஸத்ஸங்கமும், பிறகு நீதியரசர் அருணாச்சலம் அவர்கள் யோகிராம்சுரத்குமாரையும், காஞ்சி மஹாஸ்வாமிகளையும் பற்றி பேசுவதுமாக போயிற்று. ஆனந்த சந்தைதான்! நடுவிலே வருடாந்திர கும்பாபிஷேக தினமும், நீதியரசரின் ஜன்ம நக்ஷத்திர தினமும் சேர்ந்து வந்தது. காலையில் அபிஷேகம், பூஜை, பகவானின் மூர்த்தியின் தரிசன துவக்கம் போன்றவைகள் வெகு சிறப்பாக நடந்தேறியது. மாலையில் நீதியரசரின் ஜன்ம நக்ஷத்திரம் ஆஸ்ரமத்தின் அன்பர்களால் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. ஆஸ்ரமத்தில் உள்ள ஒவ்வொருவரும் நீதியரசரைப் பற்றி பேசி, தங்கள் அன்பின் அடையாளமாக மாலையும், சால்வையும் அணிவித்தார்கள்.



## அக்ஷரமணமாலை

### ஸ்ரீ ஸ்வாமிஜியின் உரைகளிலிருந்து – 149

நோக்கியே கருதி மெய் தாக்கியே பக்குவமாக்கி
நீ ஆண்டருள் அருணாசலா

ஒரு உத்தம குருவானவர் சீடனுக்கு மூன்று விதத்தில் அருள் புரிய முடியும். தனது அருட்பார்வை ஒன்றினாலேயே அவரால் சீடனை பூரண நிலைக்கு உயர்த்த முடியும். மீனானது முட்டையிட்டு விட்டு அங்குமிங்கும் அலைந்தவாறு இருக்கும். அப்படி இருக்கையிலே தனது முட்டைகளை தனது பார்வையினாலேயே பொறித்து விடும்.இப்படி அனுக்ரஹம் செய்வதையே "நோக்கியே" என குறிப்பிடுகிறார்.

நோக்கியே என்பதை முதலில் சொன்னதற்கும் காரணம் இல்லாமலில்லை. ஒரு குருவானவர் ஒரு சீடனை நினைக்காமலும் போகலாம். ஒருக்கால் நினைத்தாலும் அதை மனதில் மட்டும் வைத்துக்கொண்டு வெளியில் சொல்லாமலும் இருந்து விடலாம். ஒருக்கால் நினைத்ததை வெளியில் சொன்னாலும் அதை கேட்பதற்கு அருகிலிருக்க வேண்டும். அல்லது கேட்பவர் ஞாபகம் வைத்துக்கொண்டு அந்த சீடனிடம் சொல்ல வேண்டும்.

நினைத்து அருள் செய்வது என்பதை "கருதி" என இங்கு சொல்கிறார். ஆமையானது முட்டையிட்டு விட்டு தண்ணீருக்குள் சென்று விடும். தண்ணீரிலிருந்தவாறே கரையிலுள்ள தனது முட்டைகளை பற்றி நினைத்துக்கொண்டிருக்கும். இப்படி நினைப்பதாலேயே முட்டைகள் பொறிந்து விடும்.

அடுத்ததாக "மெய் தாக்கி" என வருகிறது. ஒரு குருவானவர் தனது ஸ்பரிசத்தினாலேயே சீடனை உத்தம நிலைக்கு கொண்டு வர முடியும். இது பலர் விஷயத்தில் நடந்திருக்கிறது என்றாலும், இது அனைவருக்கும் கிடைக்கும் என சொல்லவும் முடியாது. ஏனெனில் பல மஹான்களை தொட முடியாது.

பிரஹ்லாதன் என்ற தன் பக்தச் சிறுவனுக்காகப் பெருமான் தன் 'துஷ்ட நிக்கிரக' காருண்யத்துக்கு ஒரு கட்டுப்பாட்டினை ஏற்படுத்திக் கொண்ட அவதாரம் அல்லவா நரசிம்மாவதாரம். தன் திருநாமத்தைச் சொல்லிய சிறுவனுக்காக அவன் குலம் முழுவதும் உய்யக் கொண்ட கோமான் நரசிம்மன் என்று கம்பராமாயணம் கூறுவது பெருமானின் திருவருட் பெருக்கை மேலும் மேலும் பெருக விளக்குகிறது.

**"கொல்லேம், இனி உன் குலத்தோரை, குற்றங்கள்**
**எல்லை இலாதன செய்தாரே என்றாலும்;**
**நல்லேம், உனக்கு எம்மை; நாணாமல், நாம் செய்வது**
**ஒல்லை உளதேல், இயம்புதியால்"**

என்று உரைத்தான் நரசிங்கப் பெருமான். (கம்ப. 6356)

எம்பெருமான் திருநாமத்தை இடையறாது சொல்பவர்களுக்கு அவன் கருணை எப்படி விரியும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ ?இங்ஙனம் ஆழ்வார்களும், கம்பனும் இவ் அவதாரத்தில் பெரிதும் ஈடுபடுவதற்கு முன்னோடியாக அவர்களுக்கும் இவ் அவதாரத்தின் சீர்மையை எடுத்துக்காட்டுமாப்போலே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுந்த பரிபாடல் நரசிம்மாவதாரத்தைச் சொல்லி எம்பெருமானைத் தோத்திரம் செய்யும் அழகையும் காண்போம். பிரஹ்லாதன் இரணியன் கோபப்படும்படி அப்படி என்ன செய்தான் என்கிறது பரிபாடல், 'நிற் புகழ' என்கிறது – எம்பெருமானைப் புகழ்ந்ததுதான் அவன் செய்த தவறு – 'உலகிலேயே கடவுள் தானே; தன்னைத்தவிர வேறு கடவுள் இல்லை' என்ற பரமநாத்திக வாதம் செய்தவர்களில் இரணியனே முதல்வன் எனலாம்.

(தொடரும்)

தமிழில் 'முக்தி' என்ற சொல்லுக்கு வீடு என்ற சொல் உண்டு. வீட்டில் இருந்துகொண்டே பாகவத தர்மத்துடன் வாழ்ந்தால் முக்தி அடைந்து விடலாம் என்பதைத்தான் இந்த சொல் குறிக்கின்றது போலும்.
-ஸ்ரீஸ்வாமிஜி



அன்று பேசும்பொழுது ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், "நாம் நாமகீர்த்தனம் ஆரம்பித்த வருடத்திலிருந்து தமிழ்நாட்டிற்கு தண்ணீர் பிரச்சனையே இல்லை. காவிரி பிரச்சனையே எழவில்லை" என்றார். அதைத் தொடர்ந்து பேசிய நீதியரசர், "இப்பொழுது மேட்டூர் அணையில் நந்தி தெரிகின்றது, சர்ச் தெரிகின்றது என்ற செய்தி வந்து கொண்டிருக்கின்றது. இந்த நாமகீர்த்தன வேள்வி முடிவதற்குள் நிலைமை மாறி மேட்டூர் அணையின் நீர்வரத்து அதிகமாகும்" என்றார். அவர் சொன்னது அப்படியே நடந்ததை பத்திரிகை வாயிலாக தெரிந்துக் கொண்டிருப்பீர்கள். பூர்த்தி தினத்தன்று ஏராளமான பக்தர்கள். திருவண்ணாமலை ஆஸ்ரமத்திற்குள் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் வரவும், முத்தாய்ப்பு வைத்தாற்போல் நல்ல மழை. ஆஸ்ரமத்திற்கு வந்த அத்தனை அன்பர்களையும், ஆஸ்ரமத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் அன்பினாலும், உபசாரங்களினாலும் திக்குமுக்காட வைத்துவிட்டார்கள். நாம கீர்த்தனையில் கலந்துக் கொண்ட பலருக்கு, பல தெய்வீக அனுபவங்கள் ஏற்பட்டது.

எல்லாம் குருவின் அருள். இந்த குரு மண்டல வேள்வியை குருநாதரின் திருவடி தாமரைகளில் அர்ப்பணம் செய்வோம். இதன் பலனாக வறுமை அழியட்டும்! இல்லாமை, இல்லாமை ஆகட்டும், வன்முறை ஒழியட்டும், மனித நேயம் வளரட்டும், ஒற்றுமை ஓங்கட்டும், தெய்வீகம் எழுச்சி அடையட்டும், எங்கும் சாந்தி நிலவட்டும். நாம கீர்த்தனம் பெருகட்டும். மொத்தத்தில் கலியுகம் க்ருதயுகமாக மாறட்டும். ஜய் குருநாதா!

இன்றைய மருத்துவம் நெருங்கிய உறவில் கல்யாணம் செய்து கொண்டால், பிறக்கும் குழந்தை அவ்வளவு ஆரோக்யமாக இருக்காது என்று கூறுகின்றது. நமது ஸனாதனமான மதமோ கோத்திரம் என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தியுள்ளது. அதன் மூலம் ஒரே கோத்திரத்திலேயே கல்யாணம் செய்துக் கொள்ளக் கூடாது என்று வேறு கூறுகின்றது. இது இன்றைய மருத்துவத்தையும் தாண்டி தலைமுறையையே தவிர்த்து திருமணம் செய்து கொள்ள சொல்லும் விஞ்ஞானம் ஆகும்.
-ஸ்ரீஸ்வாமிஜி

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

*கேள்வி : தக்ஷிணாயணத்தில் உயிர் பிரிவதை விட உத்தராயணத்தில் உயிர் பிரிவது தான் உத்தமம் என்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. பீஷ்மரும் உத்தராயண புண்ய காலத்திற்காக அம்பு படுக்கை மீது படுத்திருந்தார் என்று கேள்விப்படுகிறோம். அப்படியிருக்க எவ்வளவோ மஹான்கள் தக்ஷிணாயணத்தில் ஸித்தி அடைந்துள்ளார்களே. அது ஏன் ?*

பதில் : ஒவ்வொரு மனிதனின் உடலிலும் ஒன்பது துவாரங்கள். உயிர் உடலை விட்டுப் பிரியும்பொழுது, மேற்படி உள்ள ஒன்பது துவாரங்களிலிருந்து ஏதாவது ஒரு துவாரத்தின் வழியாகத்தான் உயிர்பிரிய வேண்டும். எதன் வழியாக பிரிகின்றதோ அதைக் கொண்டு அவர்கள் அடையக்கூடிய நிலைகள் சொல்லப்பட்டிருக்கின்றது. தலையின் உச்சியில் பத்தாவது துவாரம் உள்ளது. யோகிகள் பூரணமான ப்ரம்ஹச்சர்யத்தை அனுஷ்டித்து, தங்களுடைய ரேதஸை மேலே எழுப்பி சென்று, தலையை அடைய செய்கின்றார்கள். அங்கு அவர்களுக்கு ஒரு சிறிய துவாரம் உண்டாகிவிடும். அதன் வழியாக அவர்களுடைய பிராணன் பிரிந்து, அவர்கள் தங்கள் தங்கள் உபாஸனா உலகத்தை அடைவார்கள். அப்படிப்பட்ட யோகிகளுக்குத்தான் உத்தராயணம் அவசியம்.

ஆனால், ஜீவன் முக்தனுடைய பிராணனோ வெளியில் செல்லவே செல்லாது. அது "பிருமமணே ஸ்வாஹா:" என்று பிரும்மத்திலேயே ஒடுங்கி விடும். அவர்களுக்கு போக்கும் வரவும் கிடையாது. மேலே உள்ள வெற்றிடத்தை கீழே உள்ள வெற்றிடம் சென்றடைய வேண்டும். அதுபோல் தான் இதுவும். ஆகவே ஜீவன் முக்தர்களான அவர்களுக்கு தக்ஷிணாயணம், உத்தராயணம் என்ற நியமங்கள் கிடையாது. ஏனென்றால் அவர்கள் போவதும் இல்லை, வருவதும் இல்லை.



# மாலே மணிவண்ணா – 66

–மகாவித்துவான் மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

ஐந்தே வயதுடைய பிள்ளை. அப்பொழுதுதான் பள்ளியில் சேர்ந்திருக்கிறான். சேர்ந்த உடனேயே எம்பெருமானது திருநாமங்களை இடையறாமல் சொல்லிக் கொண்டிருக்கிறான் என்றால் பெற்றவர்களுக்கு எப்படிப்பட்ட ஆனந்தம் ஏற்பட்டிருக்க வேண்டும். அப்பிள்ளையின் செயலைத் தன்னுடையதாக்கிக் கொண்டு 'என் பிள்ளை எப்படிச் சொல்கிறான் பாருங்கள்' என்று பிறரிடம் தன் பெருமையாகச் சொல்லிக் கொள்ளவல்லவா செய்வான் தகப்பன். ஆனால் இந்த இரணியன் அப்படிச் செய்யவில்லையே. பிள்ளையைச் சீறிச் சினக்கவல்லவோ செய்கிறான் என்று திருமங்கை மன்னன் நெஞ்சு புண்ணாகிறார். அந்த நேரத்தில் எம்பெருமான் தூணிலிருந்து வெளிப்படாவிட்டால் பிள்ளையின் வாய்ச்சொல் என்ன ஆகியிருக்கும். சத்தியவிரதன் அல்லவா எம்பெருமான்.

தான் சொன்ன சொல்லையும் காப்பான்; தன் அடியார் சொல்லும் சொல்லையும் காப்பான். அதனால் பிரஹ்லாதனுக்காகத் தூணிலிருந்து வெளிப்பட்டுக் காத்த சிங்கப்பெருமானைத் 'தெள்ளிய சிங்கம்' என்று பாசுரத்தில் சொல்லி மகிழ்கிறார் ஆழ்வார்.

**"பள்ளியில் ஓதி வந்ததன் சிறுவன்**
**வாயில் ஓர் ஆயிர நாமம்,**
**ஒள்ளிய வாகிப் போத ஆங் கதனுக்(கு) ஒன்றும்**
**ஓர் பொறுப்பு இலன் ஆகிப்**
**பிள்ளையைச் சீறி வெகுண்டு தூண் புடைப்பப்**
**பிறை எயிற்று அழல் விழிப் பேழ்வாய்த்,**
**தெள்ளிய சிங்கம் ஆகிய தேவைத்**
**திருவல்லிக் கேணிக் கண்டேனே"** (திவ்ய. 1075)

என்று திருவல்லிக்கேணிப் பாசுரம் நினையுந்தோறும் இன்பம் பயப்பது.இந்த அவதாரத்தில் ஆழங்காற்பட்ட கம்பன் வான்மீகியின் வழியில் இருந்து சிறிது விலகி "இரணியன் வதைப் படலம்" என்று ஒரு படலத்தையே யுத்தகாண்ட முதலில் அமைத்துத் தன் ஆறாமையைத் தீர்த்துக் கொண்டான்.

சுகம் நிறைந்த உலக வாழ்க்கை ஒரு பாதையிலும், த்யாகம் – வைராக்யம் நிறைந்த பஜனை மயமான வாழ்க்கை மற்றொரு பாதையிலும் அவருக்கு முன்னால் நின்றன. எனினும், பஜனைமயமான வாழ்க்கையையே அவர் மனம் நாடிற்று.

இந்நிலையில் ஒருநாள் ஸ்ரீ நித்யானந்த ப்ரபு அவரது ஸ்வப்னத்தில் ஸன்யாசி வேஷத்தில் தரிசனமளித்தார். ஸன்யாஸம் பெற்று பஜனைமயமான வாழ்க்கையை நடத்துவதற்கான ஆக்ஞையை, நித்யானந்தர் தனக்கு இக்கனவின் மூலம் கூறுவதாக ராதாரமணர் புரிந்து கொண்டார். மறுநாளே சொத்து, சுகங்கள் அனைத்தையும் விட்டுவிட்டு ப்ருந்தாவனத்தை நோக்கி புறப்பட்டார்.

ப்ருந்தாவனத்தில் ஸ்ரீ மாதவ்தாஸ் பாபா என்பவரிடமிருந்து ஸந்யாஸம் பெற்றார். சிறிது காலம் குருஸேவை செய்தபின் மகோரா க்ராமத்திற்கு சென்று அங்கு அவருடைய குருபாயியான ஸ்ரீராமக்ருஷ்ணதாஸ் பாபாவிடமிருந்து ஸ்ரீமத் பாகவதம், ஸ்ரீ சைதன்ய சரிதாம்ருதம் போன்ற க்ரந்தங்களைப் பயின்றார்.

இதன் பின், அவர் ரால் க்ராமத்திற்கு அருகிலுள்ள விஹார வனத்தில் வஸித்து பஜனை செய்ய ஆரம்பித்தார். வெகு தீவிரமான ஸாதனையை மேற்கொண்டார். ஸாதனையின் தீவிரத்தால் பலநாட்கள் மதுகரிக்கு கூட செல்லமாட்டார். மதுகரியில் கிடைக்கும் ரொட்டிகளையும், காயவைத்து தேவைப்படும்பொழுது தண்ணீரில் ஊறவைத்து உண்பார். இதனால் அவருக்கு வயிற்றில் கேஸ்ட்ரிக் அல்ஸர் வந்து விட்டது. வயிற்று வலியினால் மிகவும் துடித்தார் ராதாரமணர். சிகிச்சைக்காக கல்கத்தா செல்ல வேண்டியதாயிற்று. அங்கு அவரை மருத்துவமனையில் சேர்க்கும் அளவிற்கு நிலைமை மோசமாகிவிட்டது. 45 நாட்கள் தொடர்ந்து வைத்தியம் செய்யப்பட்டது. அவருடைய தம்பி ஸ்சீதுலால் மற்றும் இன்னொரு உறவினர் பெண் அவரை இக்காலத்தில் நன்கு கவனித்துக் கொண்டனர். ஆனால் ராதாரமணருடைய நிலையோ, உயிர் போய்விடுமளவிற்கு மோசமாகிக் கொண்டேயிருந்தது.

(தொடரும்)



**கேள்வி :ஆதிசங்கரரின் உபதேசத்திற்கும், பகவான் ரமணரின் உபதேசத்திற்கும் என்ன வித்தியாசம் ?**

பதில் : ஆதிசங்கரர் நிர்குணமான, நிர்விகாரமான, ஸத்தாமாத்ரமான, ஜ்யோதி ஸ்வரூபமான பிரும்மத்தை பற்றி கூறி "அது நீதான்" என்றார். ஆதிசங்கரர் ஐம்புலன்களுக்கும் புலப்படாத பிரும்மத்தைப் பற்றிக் கூறி "அந்த அழியாத பிரும்மம் நீதான்" என்றார். பகவான் ரமணரோ, நாத்திகன் உட்பட 'நான்' இருக்கின்றேன் என்பதை மறுக்க முடியாது. அந்த 'நான்' யார் என்பதை விசாரம் செய். அதன் முடிவு ஆனந்தமயமானது. "நீ அழியாத பிரும்மம் என்பதை உணர்வாய்" என்றார். சங்கரர் "புலப்படாத பிரும்மம்தான் நீ" என்றார். பகவான் ரமணரோ "அனைவரும் மறுக்க முடியாத நான் என்ற உணர்வுதான் பிரும்மம்" என்கின்றார்.

**கேள்வி : 'மஹா மந்திரத்தை' பற்றி ஏன் ஸ்ரீமத் பாகவதத்தில் எந்த இடத்திலும் சொல்லவில்லை.**

பதில் : மந்திரத்தை நேரிடையாக கூறாமல் மறைத்து சொல்வது என்பது ஒரு மரபு. அதுபோல் ஸ்ரீமத் பாகவதத்தில் ஹரே, ராம, க்ருஷ்ண போன்றவைகள் தனித்தனியாக ஆங்காங்கு சொல்லப்பட்டுள்ளன.

**கேள்வி : தியானம் செய்தால், B.P. குறையும், Sugar குறையும், ஞாபக சக்தி அதிகரிக்கும் என்றெல்லாம் கூறுகிறார்களே ? உண்மையா ?**

பதில் : உண்மைதான். ஒரு குழந்தை தினமும் தன் வீட்டிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பள்ளிக்கூடத்திற்கு நடந்து செல்கின்றான் என்று வைத்துக் கொள்வோம். அவன் பள்ளிக்கூடம் செல்வதே walking–காகத்தான் என்றால் எப்படியோ அப்படித்தான் இதுவும்.

**கேள்வி : இதிஹாஸ புராணங்களை குழந்தைகள் படிப்பதால் என்ன பயன் ?**

பதில் : பள்ளியில் குழந்தைகளுக்கு சீருடை வைக்கப்பட்டுள்ளது.அதன் காரணம் என்ன ?. படிக்கும்

குழந்தைகள் தங்களுடைய வசதிக்கு தகுந்தாற்போல் உடை அணிந்து வந்தால் படிக்கும் மற்ற குழந்தைகளிடத்தில் அது ஏற்ற தாழ்வு மனப்பான்மையை உண்டாக்கும் என்பதே சீருடையை கொண்டு வந்ததன் நோக்கம். குழந்தைகளுக்கு பள்ளியில் விளையாட்டும் மிகவும் அவசியம். ஏன் ? விளையாட்டு என்பது உடற்பயிற்சி மட்டும் அல்ல. அப்படி விளையாடும்பொழுது ஏற்படக்கூடிய வெற்றி தோல்விகளை ஸமமாக பார்க்க வேண்டும் என்ற பழக்கம் வர வேண்டும் என்பதே. அதுபோல் வாழ்க்கை என்பது சிக்கல் நிறைந்தது. எதிர்ப்புகள், ஏமாற்றம், நயவஞ்சகம், துரோகம், நட்பு, கஷ்டம், பொறாமை; விதியின் விளையாட்டு போன்ற பல கலவைகளின் சேர்க்கைதான் உலகம் என்பதை அந்த குழந்தைகளுக்கு இதிகாச புராணங்கள் புரிய வைத்து விடுகின்றன. மேலும் இத்தனை இடர்பாடுகளுக்கு நடுவேயும் நாம் நம்முடைய Valueவை விடாமல் நடக்க வேண்டும் என்ற பாடத்தை நமக்கு அது தருகின்றது.

ஆதிசங்கரர் பிக்ஷைக்கு வந்தபொழுது, ஒரு ஏழை மாது வறுமையினால் ஒரு காய்ந்த நெல்லிக்காயையே பிக்ஷையாக போட்டார். அதன் பலனாக அவர் வீட்டு முற்றத்தில் தங்க நெல்லிக்காய் மழை பெய்தது. வேறுவிதமாக அந்த அம்மாவிற்கு பொருளை இறைவன் அளித்திருக்கலாம். ஆனால் தங்க நெல்லிக்காயாகத்தான் கொடுத்தான். இதிலிருந்து நீ ஸாதுக்களுக்கு எதை செய்கின்றாயோ **அதுவேதான்** உனக்கு பலமடங்காக திரும்பும் என்பதை உலகத்திற்கு காண்பிக்கவே இறைவன் இப்படி செய்தான்.

-ஸ்ரீஸ்வாமிஜி



வங்காளத்திலுள்ள முலடி எனும் க்ராமத்தில் 1932 ஆம் வருடம் பிறந்தவர் ராதாரமண தாஸர். பரம வைஷ்ணவ ப்ராம்மண குலத்தில் தோன்றிய அவருக்கு சிறு வயதிலிருந்தே பக்தி ஸம்ஸ்காரங்கள் இருந்தன. அவரது தந்தை ஸ்ரீ வினய் க்ருஷ்ணர் ஜமீன்தாராகவும், கல்கத்தா நீதிமன்றத்தில் வக்கீலாகவும் இருந்தார்.

அவரது தாய் ஸ்ரீமதி மேனகா தேவி பரம ஸாத்வி. ஐந்து வயதே இருக்கும்பொழுது அவள் ஸ்ரீராமதாஸ் பாபா என்பவரிடமிருந்து தீக்ஷை பெற்றாள். ராதாரமணரும் சிறு வயதிலேயே இதே ஸ்ரீ ராமதாஸ் பாபாவிடமிருந்து மந்த்ர தீக்ஷை பெற்றார்.

ராதாரமணருக்கு முதல் குரு அவர் தாய் தான். தாயின் பக்திமயமான ஜீவனமும் அவளின் உபதேசங்களும் சிறு வயதிலேயே ராதாரமணரின் ஹ்ருதயத்தில் பக்தியை தோற்றுவித்தன. ஆனால் ஸ்ரீ ராமதாஸ் பாபாவிடமிருந்து தீக்ஷை பெற்ற பின் அவரின் நிலையே மாறிவிட்டது. ராதா–க்ருஷ்ணர் மற்றும் கௌர்–நிதாயியின் த்யானத்திலேயே அவர் மூழ்கியிருப்பார். அடிக்கடி ஏகாந்தமாகச் சென்று மணிக்கணக்கில் த்யானம் புரிவார். இவ்வாறே அவர் காலம் கழிந்தது. ஸ்ரீராமதாஸ் பாபாவிடமிருந்து தீக்ஷை பெற்றபொழுது அவரின் கண்களிலிருந்து பெருக ஆரம்பித்த நீர், அவரது அந்திம சுவாசம் வரை பெருகியவாறே இருந்தது.

இந்நிலையிலேயே அவர் கல்வியும் கற்றார். கல்லூரிக் காலங்களிலும் அவர் வருத்தத்துடனும், உள்நோக்கிய பார்வையுடனும் இருப்பார். யாருடனும் பேச மாட்டார், விளையாட்டுக்களில் பங்கேற்கவும் மாட்டார், படிப்பிலும் அதிக கவனம் செலுத்த மாட்டார். ஒருநாளில் பெரும்பகுதியை அவர் நாம ஜெபத்திலேயே செலவிடுவார். அப்படியிருந்தபோதிலும் கல்கத்தா பல்கலைக்கழகத்திலிருந்து எம்.ஏ. பட்டம் தங்கப்பதக்கத்துடன் பெற்றார். இந்நிலையில் அவர் தாய்–தந்தையருக்கு அவரது திருமணத்தின் கவலை ஏற்பட்டது. கல்யாணத்திற்கு மிகவும் அழகான, படித்த பெண்ணை பார்த்தும் விட்டார்கள்.. ராதாரமணருக்கோ விவாஹம் செய்து கொள்வதில் விருப்பமில்லை. கல்யாண பேச்சோ தீவிரமாக போய்க் கொண்டிருந்தது. தனது வாழ்க்கையில் ஒரு முக்கியமான முடிவு எடுக்க வேண்டிய நிலையில் இருந்தார் ராதாரமணர்.

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்



வைகுண்டத்தை விடவும் பூலோகத்திலுள்ள ப்ருந்தாவனமே மிகவும் உயர்ந்தது என்கின்றனர் மஹான்கள். துளஸீதாஸர் இவ்விரண்டையும் தராஸிலேயே வைத்து விட்டார். ப்ருந்தாவனம் தனது மேன்மையின் கனத்தினால் பூலோகத்திலேயே இருந்து விட்டதாம். வைகுண்டம் ஆகாயத்திற்கு போய்விட்டதாம்.

> *பிருந்தாவனத்தில் ஒருவரது அந்திம காலம் இருப்பதற்கும் ராதாராணியின் பரம க்ருபை வேண்டும்.*

ஸாதகர்களுக்கு பிருந்தாவனத்தின் மேன்மை மிகவும் அதிகமானது. ஏனெனில் பிருந்தாவனம் அவர்களின் குண – தோஷங்களை ஆராயமல், பிருந்தாவன வாஸத்திலேயே ஸ்ரத்தையாக இருக்கும் அவர்களுக்கு ப்ருந்தாவனம் ஸத்கதியை அளித்துவிடும். ஒரு தாய் தனது குழந்தையின் மேல் படிந்திருக்கும் அழுக்குகளை அகற்றி சுத்தமாக்குவது போல், ப்ருந்தாவனம் நம்மை சோலைவனமாக்கி பகவானிடம் சேர்த்து விடுகின்றது. ஒருவர் எப்படிப்பட்டவராக இருந்தாலும் சரி, பிருந்தாவனத்தை ஸரணடைந்து அங்கேயே அவர் உயிர் பிரியும்பொழுது, ப்ருந்தாதேவி தனது பரம கருணையினால் அவருக்கு கோலோகத்தை அளித்துவிடுகிறாள். ஆனால், பிருந்தாவனத்தில் ஒருவரது அந்திம காலம் இருப்பதற்கும் ராதாராணியின் பரம க்ருபை வேண்டும். ஒருவர் பிருந்தாவனத்திலேயே வெகுகாலம் வாஸம் செய்திருந்தபோதிலும், ராதையின் க்ருபை இல்லாவிடில், எக்காரணத்தாலோ அந்திம காலத்தில் அவர் ப்ருந்தாவனத்தை விட்டு வெளியே சென்று விடுவார். அதுவே ராதாராணியின் க்ருபா பாத்திரர்கள் வெளி ஊரில் இருந்தாலும், அந்திம காலத்தில் ராதாராணி அவர்களை ப்ருந்தாவனத்திற்கு அழைத்துக் கொண்டு விடுவாள். அப்படி ஸ்ரீமதி ராதை அந்திம காலத்தில் தன்னிடம் அழைத்துக் கொண்ட ஒரு பக்தரின் சரிதத்தை பார்ப்போமா ?.



## பாகவத பழம்

– ஸ்ரீஸ்வாமிஜி

3

கேசவா, நாராயணா, மாதவா, கோவிந்தா, விஷ்ணு, மதுசூதனா த்ரிவிக்ரமா, வாமனா, ஸ்ரீதரா, ரிஷிகேசா, பத்மநாபா, தாமோதரா என்று எந்த வாசுதேவனுக்கு பன்னிரண்டு நாமங்கள் ஜகத் பிரசித்தியோ, அவனுடைய பெருமையை பறைசாற்ற வந்த ஸ்ரீமத் பாகவதம் பன்னிரண்டு ஸ்கந்தங்களாக அமைந்துள்ளது பொருத்தம்தானே. பன்னிரண்டு அக்ஷரங்களை கொண்ட துவாதசாக்ஷரி மந்திரத்தால் உபாசிக்கப்பட வேண்டியவன் எவனோ அவனுடைய சரித்திரத்தை பன்னிரண்டு ஸ்கந்தங்களில் அமைத்தது பொருத்தம்தானே. எந்த விஷ்ணு, துவாதசி விரதத்தினால் மிகவும் சந்தோஷப்படுவாரோ அவருடைய சரித்திரத்தை பன்னிரண்டு ஸ்கந்தத்தில் அமைத்தது பொருத்தம்தானே.

> ***ஸாதுக்களுடைய உச்சிஷ்டான்னத்தை சாப்பிட்டு தனக்கு பக்தி வந்ததாக நாரதர் இதே பாகவதத்தில் சொல்ல போகின்றார். பகவந்நாம போதேந்திராளுடைய உச்சிஷ்டான்னத்தை சாப்பிட்டு ஊமை குழந்தைக்கு ஞானம் ஏற்பட்டது. ராமானுஜர் கச்சியப்ப நம்பிகளின் உச்சிஷ்டான்னத்திற்கு ஆசைப்பட்டார்.***

தமிழில் ஸ்ரீமத் பாகவதத்தின் லீலைகளை மட்டும் பாடியவர் பெரியாழ்வார் ஆவார். ஊத்துக்காடு வேங்கடகவி அவர்கள் பரம பாகவதர். அவர் பாடும்பொழுது தாளம் போட மாட்டாராம். ஏன் என்றால், கோபாலன் வந்து அவருடைய மடியில் அமர்ந்து கொள்வானாம். 'பழமோ பழம்' என்று ஸ்ரீமத் பாகவதத்தின் பெருமையை தமிழில் கீர்த்தனமாக பாடியுள்ளார். ஸாதுக்களுடைய உச்சிஷ்டான்னத்தை சாப்பிட்டு தனக்கு பக்தி வந்ததாக நாரதர் இதே பாகவதத்தில் சொல்ல போகின்றார். பகவந்நாம போதேந்திராளுடைய உச்சிஷ்டான்னத்தை சாப்பிட்டு ஊமை குழந்தைக்கு ஞானம் ஏற்பட்டது. ராமானுஜர் கச்சியப்ப நம்பிகளின் உச்சிஷ்டான்னத்திற்கு ஆசைப்பட்டார்.

வேதாந்திகள் உச்சிஷ்டான்னம் என்றால் என்ன சொல்வார்கள் தெரியுமா ?. ஸாதுக்கள் வாயிலிருந்து வரும்

உபதேசங்கள்தாம் உச்சிஷ்டான்னம் என்பார்கள். அப்படி பார்த்தால், இந்த பதினெட்டாயிரம் ஸ்லோகங்களான ஸ்ரீமத் பாகவதம் யார் யாருடைய வாயிலிருந்து புகுந்து புறப்பட்டு வந்திருக்கின்றது தெரியுமா ? லக்ஷ்மிநாதனான நாராயணன் பிரும்மாவிற்கு சதுஸ்லோகி பாகவதமாக சொன்னார். பிரும்மா நாரதருக்கு சொன்னார். நாரதர் வ்யாஸருக்கு சொன்னார். வ்யாஸர் சுகருக்கு சொன்னார். சுகர் பரிக்ஷித்திற்கு சொன்னார். உடன் இருந்து எவ்வளவோ மஹான்கள் கேட்க அவர்கள் மூலமாக இன்று வரை நம் வரையில் வந்து கொண்டிருக்கின்றது. ஸ்ரீமத் ராமாயணத்திற்கு பகவான் கேட்ட பெருமை உண்டு என்றால் ஸ்ரீமத்பாகவதத்திற்கோ, பகவானே சொன்ன பெருமை உண்டு.

மஹாபிரபு தன்னுடைய வாழ்க்கையில் நான்கு விஷயங்களைத்தான் பிராணனாக வைத்துக் கொண்டிருந்தார். ஸ்ரீமத் பாகவதம், ராதாகிருஷ்ண யுகளம், மஹாமந்திரம், ப்ருந்தாவனம் என்பவையே அந்த நான்கும். மராட்டிய பக்தர்கள் அனைவரும் பாகவத ஸாரத்தையே தங்களுடைய அபங்கங்களில் பாடியுள்ளார்கள். மீரா எப்பொழுதும் ஸ்ரீமத் பாகவதமே படித்து வந்தாள். ஸ்ரீவல்லபர் பகவானிடம், நான் அடுத்த பிறவியில் புழுவாக பிறக்க வேண்டும் என்கின்றார். புழு எப்படி பூமியில் ஒரு துளி இடம் கூட விடாமல் நகருமோ அப்படி நகர்ந்து அந்த அந்த இடத்தில் எல்லாம் ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹம் நடத்த வேண்டும் என்ற ஆசையாம் அவருக்கு. அலஹாபாத் கங்கை, யமுனை, சரஸ்வதி சேரும் திரிவேணி சங்கமத்தில் அமர்ந்து ஸ்ரீமத் பாகவதத்தில் உள்ள பதினெட்டாயிரம் ஸ்லோகங்களையும் மனதில் சொல்லிய பிறகு ஜலசமாதி ஆனார்

ஸ்ரீராமகிருஷ்ணர். ஸ்ரீமத் பாகவதத்தையே படித்தும், நாமகீர்த்தனை செய்தும், பாகவத தர்மங்களையுமே உபதேசித்தும் வந்தார். ஒருநாள் ராமகிருஷ்ண பரமஹம்ஸர் ராதாகாந்தர் ஸன்னதியில் அமர்ந்திருந்தார். அப்பொழுது அவருக்கு பாவ ஸமாதி ஏற்பட்டது. அதில் ஒரு திவ்ய காட்சியை கண்டார். ஒரு திவ்ய ஜோதி ராதாகாந்தர், பரமஹம்ஸர், அங்கிருந்த ஸ்ரீமத் பாகவத க்ரந்தம் இதில் மாறி மாறி சுழன்று வந்தது.



இதைக் கேட்ட கணவன், "அவர் அந்த உலக்கையைக் கேட்டால் கொடுத்திருக்க வேண்டியதுதானே. நான் அவர் கேட்டபடி அந்த உலக்கையை அவரிடமே கொடுத்துவிட்டு அவரை உணவு உண்ண அழைத்து வருகின்றேன். நீ அதற்குள் சமையல் செய்து வை" என்று கூறிவிட்டு கிளம்பினான். வீதியில் சென்று கொண்டிருக்கும் அடியாரை கண்டுபிடித்து விட்டான் கணவன். அவரை "ஸ்வாமி!" என்று அழைத்தான். அவர் திரும்பிப் பார்த்தார். உலக்கையுடன் அவன் ஓடி வருவதைப் பார்த்தவுடன் கிலி எடுத்தது. அவ்வளவுதான். அந்த அடியாருக்கு எங்கிருந்துதான் தெம்பு வந்தது என்று தெரியாது. அவர் ஓட்டம் பிடிக்க ஆரம்பித்தார். அதைக் கண்ட கணவனோ வேகமாக துரத்த ஆரம்பித்தான். அந்த அடியார் எங்கு சென்று ஒளிந்து கொண்டார் என்றே தெரியவில்லை. அதற்கு பிறகு எந்த அடியாரும் அவனுடைய கண்களில் படுவதே இல்லை.

உலக்கையுடன் அவன் ஓடி வருவதைப் பார்த்தவுடன் கிலி எடுத்தது. அவ்வளவுதான். அந்த அடியாருக்கு எங்கிருந்துதான் தெம்பு வந்தது என்று தெரியாது. அவர் ஓட்டம் பிடிக்க ஆரம்பித்தார்.

ராமருடைய ராஜ்யத்தில் யாரோ ஒருவர், அவருடைய மனைவி சீதையை பற்றி அவதூறாக பேசிவிட ஸ்ரீராமர் சீதையை மீண்டும் காட்டிற்கு அனுப்பினார் என்று பார்க்கின்றோம். அதற்கு பதிலாக ராஜ்யத்தை துறந்துவிட்டு சீதையுடன் நிம்மதியாக இராமர் இருந்திருக்கலாம். ஆனால் இங்கு அது விஷயமில்லை. ராஜ்யத்தை பரிபாலனம் செய்பவர் தன்னுடைய தேசத்தில் வாழக்கூடிய கடைசி குடிமகனுக்கும் கூட ஸம்மதமாக வாழ வேண்டும் என்று தர்மத்தை காட்ட வந்தவராகவே ராமர் இருப்பதாலேயே ராஜ்யத்தை துறக்கவில்லை. ராஜ்யத்தின் மீது இருக்கக்கூடிய ஆசையினால் அல்ல

-ஸ்ரீஸ்வாமிஜி

வந்த அடியார் நீராடிவிட்டு, நாம கீர்த்தனம் செய்துக் கொண்டு அமர்ந்திருந்தார். அப்பொழுது மனைவி என்ன செய்தாள் தெரியுமா ? அவர் கண்களில் படுவது போல் ஒரு பெரிய உலக்கையை எடுத்து நீரினால் சுத்தம் செய்து அதற்கு சந்தன குங்குமம் எல்லாம் இட ஆரம்பித்தாள்.

வந்த அடியாரோ "எதற்காக இப்படி உலக்கைக்கு அலங்காரம் செய்கின்றீர்கள்" என்று கேட்டார். மனைவி, இதுதான் சமயம் என்று நினைத்தாள். இப்படி கேட்ட அந்த அடியாரை பார்த்து, "என் கணவரைப் பற்றி உங்களுக்குத் தெரியாதா" என்றபடி பேச்சை ஆரம்பித்தாள். "அவர் அப்படித்தான். உங்களைப் போன்ற நல்லவர்களை பார்த்தால் வீட்டிற்கு அழைத்து வருவார். ஆனால் அப்படி வருபவர்களை பார்த்தால் எனக்கு மிகவும் பாவமாக உள்ளது" என்று முடித்தாள். அதற்கு அந்த அடியவரோ, " என் பாவமாக உள்ளது" என்றார்.

"அவர் இப்படி அழைத்து வரும் அடியவர்களுக்கு அன்னமிடுவதற்கு முன் இந்த உலக்கையால் அடித்துவிட்டுதான் அன்னமிடுவார்; அதை நினைத்துதான் வருந்துகிறேன்" என்றாள். "அதற்காகத்தான் இந்த உலக்கையை அலங்காரம் செய்கின்றேன் பாருங்கள்" என்றாள்.

அவரோ நடுங்கியவாரே, எவ்வளவு அடி அடிப்பார் என்று கேட்டார். மனைவியோ அவருக்கு கொஞ்சம் psychological problem உண்டு, எவ்வளவு வேண்டுமானாலும் அடிப்பார் என்றாள். அவ்வளவுதான் இதைக் கேட்ட பிறகும், அவர் ஏன் அங்கு இருக்கின்றார். ஓட்டம் பிடித்தார். கணவன் வேண்டிய சாமான்களுடன் வீடு திரும்பினான். அடியாரைக் காணாது அதைப்பற்றி மனைவியிடம் கேட்டான். அதற்கு அவளோ, "நம் வீட்டில் பரம்பரையாக உள்ள உலக்கையை அவர் கேட்டார். உங்களை கேட்காமல் தரமுடியாது என்றேன். அவ்வளவுதான் அந்த அடியாருக்கு வந்ததே கோபம். நான் எவ்வளவு சொல்லியும் கேட்காமல் கிளம்பி விட்டார்" என்றாள்.



பரமஹம்ஸர் இதன் பொருள் என்ன என்று வினவ ஸ்ரீமத் பாகவதம், பகவான், பக்தன் மூன்றும் ஒன்றே, என்ற பதில் அவருக்கு பகவானிடமிருந்து வருகின்றது. ஸ்ரீமத் பாகவதமே ஸ்வயம் பகவான். செடிகளில் துளஸி; மரங்களில் அஸ்வத்தம் (அரச), வில்வம்; தீர்த்தங்களில் கங்கை, புஷ்கரம்; பக்ஷிகளில் கருடன்; விலங்குகளில் பசு; மலைகளில் திருவண்ணாமலை, கோவர்த்தன் போன்று ஸ்ரீமத் பாகவதம் புத்தகமே பகவானாகும்.

ஒரு ஸமயம் ஷீரடி சாய்பாபா அவருடைய வழக்கமான இடத்தில் அமர்ந்திருக்கின்றார். தென் இந்தியாவில் இருந்து ஒரு துறவி அவரை தர்சனம் செய்ய வருகின்றார். ஷீரடி மஹாத்மாவோ உடனே ஒழுக்கமில்லாத அந்த துறவியை வெளியே போகச் சொல் என்கின்றார், கோபத்தோடு. அவர் அழுது கொண்டு மன்னிப்பு கேட்க, ஷீரடி மஹாத்மா அவரை பாகவதம் படிக்கச் சொல்கின்றார். ஏழுநாட்கள் பாகவதம் படித்து முடிக்க, போதாது மனது ஈடுபாட்டுடன் படிக்கவில்லை. மனது ஈடுபாட்டுடன் பாராயணம் இன்னும் ஒரு ஸப்தாஹம் பாராயணம் செய் என்கின்றார். அப்படியே அவர் செய்ய, கடைசி ஸ்லோகம் படிக்கும்பொழுது அவர் ஷீரடி மஹாத்மாவின் மடியில் தலை வைக்க, அவருடைய ஜீவன் பிரிகின்றது.

பகவந்நாம போதேந்திரர் கிராமம் கிராமமாக பிரச்சாரம் செய்து வந்தார். மருதாநல்லூர் ஸத்குரு ஸ்வாமிகளும், ஸ்ரீமத் பாகவதத்தையே பிரச்சாரம் செய்து வந்தார். பரம ராம பக்தரான தியாகராஜ ஸ்வாமிகளும் ஸந்யாஸம் வாங்கிய பிறகு ஸ்ரீமத் பாகவதத்தையே நித்ய பாராயணம் செய்து வந்தார்.

மாயவரம் பெரியவாள் என்றொரு மஹாத்மா இருந்தார். மாயவரம் ரயில்நிலையத்தில் பைத்தியம் போல் அமர்ந்திருப்பார். அந்த காலத்தில் ரயிலிலிருந்து யாராவது இறங்கி மாட்டு, குதிரை வண்டிகளில் செல்வார்களானால், வண்டியில் பின்னால் உள்ள கம்பியை பிடித்துக் கொண்டு பாகவதம் சொல்லிக்கொண்டே போவார். வண்டிக்காரன் அவருடைய அருமை தெரியாமல் சாட்டையால் அடித்து விரட்டுவான். – (கனியும்)

# நமது ஸ்தாபனங்கள் ஆற்றும் சமுதாயப்பணிகள்

1. கடந்த இரண்டு வருடங்களாக வழங்கியதுபோல், இந்த வருடமும் ஆகஸ்ட்-15 சுதந்திர தினம் அன்று வெள்ளரை கிராமத்தில் உள்ள பள்ளி மாணவ, மாணவியருக்கு சீருடை வழங்கப்பட்டது.
2. கொளத்தூர் கிராமத்தில் உள்ள நடுநிலைப்பள்ளியில் குடிநீர் வசதியின்றி கஷ்டப்படும் மாணவர்களின் குறைதீர்க்க மேல்நிலை தொட்டி (Sintex Tank) அமைத்து Jet Pump மூலம் கிணற்று நீர் இறைத்து குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.
3. மாகாண்யம் கிராமத்தில் உள்ள ஆதி திராவிடர் குடியிருப்பில் அமைந்துள்ள பாலர் பள்ளிக்கு அலமாரி, மேஜை மற்றும் நாற்காலி வழங்கப்பட்டது.
4. மாகாண்யம் கிராமத்தினர் கட்டியுள்ள விநாயகர் கோயிலுக்கு விநாயகர் சிலை, பீடம், மற்றும் மூஷிகம் வாங்க பொருள் உதவி அளிக்கப்பட்டது.
5. கிராமியக் கலைகளை போற்றும்விதமாக, விநாயகர் சதுர்த்தி அன்று இரவு மாகாண்யம் கிராமத்தில் உள்ள விநாயகர் கோயிலில் ப்ரஹ்லாதன் கூத்து ஏற்பாடு செய்யப்பட்டது.

நமது சத்சங்கத்தை சேர்ந்த திரு. தீனதயாளன், வெள்ளரை மாணவர்களுக்கு சீருடை வழங்கும் காட்சி





திரு. தீனதயாளன் நமது பாடசாலையில் சுதந்திர தின கொடி ஏற்றும் காட்சி





# பாலகர்களுக்கு ஒரு கதை

– ஸ்ரீஸ்வாமிஜி



ஒற்றுமை எல்லோருக்கும் மிகவும் அவசியம். பெரிய பெரிய காரியங்கள் என்று இல்லை, மிகவும் சிறிய காரியங்கள் கூட ஒற்றுமை இருந்தால்தான் சாதிக்க முடியும். நான் என்ற அகங்காரமும், ஒருமித்த சிந்தனையின்மையும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையின்மையும், கீழ்ப்படிய மறுப்பதும், ஒற்றுமையை குலைத்துவிடும்.

ஊர், உலகத்துடன் ஒத்துவாழ்வது இருக்கட்டும். முதலில் நம் உடன் வாழ்பவர்களுடன் ஒத்துழைக்க வேண்டும். அப்படி ஒற்றுமையுடன் இருந்தால் தான் எந்த ஒரு நல்ல விஷயத்தையும் செய்ய முடியும். ஒரு ஊரில் கணவன், மனைவி இருவர் வாழ்ந்து வந்தார்கள்.

கணவனுக்கோ இறைவனுடைய அடியார்களை தன் வீட்டிற்கு அழைத்து அன்னமிட வேண்டும் என்று ஆசை. ஆகவே வீதியில் எந்த ஸாதுவை பார்த்தாலும் "என் வீட்டிற்கு உணவு உண்ண வாருங்கள்" என்று அழைத்து வந்துவிடுவார். நேரம் காலம் பார்க்க மாட்டார். நாளுக்கு நாள் இவர் இப்படி அழைத்து வருபவர்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே இருந்தது. அவருடைய மனைவிக்கோ கணவனின் போக்கு பிடிக்கவில்லை. "நேரம் காலம் பார்க்காமல், இவர் தன் இஷ்டத்திற்கு அடியார்களை அழைத்து வந்து கொண்டிருக்கின்றார். அரிசி, மளிகை சாமான்கள் எல்லாம் என்ன விலை விற்கின்றது. நமக்கு எப்படி கட்டுப்படியாகும் ?. மேலும் நாம் எவ்வளவுதான் வேலை செய்ய முடியும் ? இப்படி வருபவர், போகிறவர்கள் எல்லோருக்கும் சமைத்துப் போட்டால் நம் உடம்பு என்ன ஆவது ? இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும்" என்று நினைத்துக் கொண்டிருந்தாள். தகுந்த சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஒருநாள், வழக்கம் போல் கணவர் ஒரு அடியாரை வீட்டிற்கு அழைத்து வந்தார். மனைவி, இதுதான் சரியான சமயம் என்று நினைத்தாள். கணவரைப் பார்த்து "விருந்து படைப்பதற்கு மேலும் சில சாமான்கள் தேவை, சென்று வாங்கி வாருங்கள்" என்று அனுப்பி வைத்தாள்.

30. அர்ச்சாவதாரத்தின் முன்பு சென்றவுடன் கண்களை மூடிக் கொள்ளக் கூடாது.
31. கோவில்களில் தாய்மொழியில் அந்த அந்த தெய்வத்தின் துதிகளை தகுந்த அதிகாரிகளைக் கொண்டு பயிற்றுவிக்க வேண்டும்.
32. தெரிந்தவர்களுக்கு பணம் கொடுத்து தந்திரமாக ஸ்வாமி தர்சனம் செய்யக் கூடாது.
33. கோவிலை ஒருமுறைக்கு மேல் வலம் வர வேண்டும்.
34. விஷ்ணுவை அக்ஷதையால் அர்ச்சனை செய்யக் கூடாது. அப்படி செய்தால் தரித்ரம் வரும்.
35. கோவிலிலிருந்து எந்த பொருளையும் வீட்டு உபயோகத்திற்கு எடுத்துச் செல்லக் கூடாது. ஒரு இலை, பூ கூட எடுத்துச்செல்ல கூடாது.
36. கோவிலில் இறைவனுடைய அடியார்களைத் தவிர மற்றவர்களை வணங்கக் கூடாது.
37. கோவிலில் உள்ள மூர்த்திகளை தொடுவதற்கு நமக்கு அனுமதி கொடுத்தாலும் கூட அவர்களை தொடக்கூடாது.



மராட்டிய மொழியில் ஸ்ரீஸ்வாமிஜியின் நூல்களை மொழி பெயர்த்த திரு.பிரஸாந்த் ஹிரே அவர்கள் முதல் பிரதியை ஸ்ரீஸ்வாமிஜியிடமிருந்து ராதா கல்யாணத்தன்று பெற்றுக்கொண்டார்



## ப்ரேமிகவரதனின் 15 வது பிரும்மோத்ஸவ நிகழ்ச்சிகள்




தினமும் ஸ்ரீமத்பாகவத பாராயணமும், ஸ்வாமி புறப்பாடும் நடைபெற்றது




பின்னர் திருமஞ்சனமும் அர்ச்சனையும் நடைபெற்றது



ப்ரேமிக வரதனுக்கு பூஜைக்கு பின் தூபம் போடப்படுகிறது



தீபாராதனை நடைபெறுகிறது தினமும் பல பக்தர்கள் கண்டு பிரேமிக வரதனின் அருள் பெற்றனர்



பூஜைக்கு பின் தீர்த்தப்ரஸாதம் ஸ்ரீஸ்வாமிஜி தனது திருக்கரங்களால் தினமும் தந்தார்.



இறைவனுடைய துதிகள், நாமங்கள் இவற்றை சொல்ல வேண்டும்.

18. கீழே கிடக்கும் குப்பைகள் போன்றவற்றை எடுத்து அப்புறப்படுத்த வேண்டும்.
19. கோவில் பிரகாரத்தில், கோபுரங்களில் முளைத்திருக்கும் செடிகளை அடிக்கடி அழிக்க வேண்டும்.
20. கோவிலுக்குள் சென்றபிறகு நம்மை பிறர் கவனிக்கின்றனரா என்ற எண்ணத்தை விட்டுவிட வேண்டும்.
21. கோவிலுக்குள் விளையாட்டாக கூட சத்தியம் செய்யக் கூடாது.
22. கோவிலுக்குள் மெதுவாகத்தான் நடக்க வேண்டும். பரபரப்பு கூடாது.
23. உடல்நிலை சரியில்லாதவர்கள், அங்கஹீனம் உடையவர்கள், வயதானவர்கள் அல்லது தகுந்த காரணமுடையவர்கள் தவிர மற்றவர்கள் கட்டண தரிசனம் செய்யக் கூடாது. தர்மதர்சனமே செய்ய வேண்டும்.
24. கொடிக்கம்பத்தின் ஸமீபம் தவிர வேறு எங்கும் நமஸ்கரிக்கக் கூடாது.
25. சிறு கல்கண்டு, எண்ணெய், திரி, பூ என்று ஏதாவது உபகாரம் எடுத்துச் செல்ல வேண்டும்.
26. கோவிலுக்கு சற்று முன்பாகவாவது வாகனத்தில் இருந்து இறங்கி நடந்து செல்ல வேண்டும். நேரே கோவில் வாசலில் சென்று காரில் இறங்கக் கூடாது.
27. கோவிலிற்கு செல்வதற்கு முன் கை கால்களை சுத்தம் செய்துக் கொள்ள வேண்டும்.
28. சுத்தமான, நம்முடைய கலாச்சாரத்தை ஒட்டிய உடைகளை அணிந்து செல்ல வேண்டும்.
29. மலைக்கோவில்களுக்கு ஏறித்தான் செல்ல வேண்டும். (உடல்நிலை, வயது, அங்க குறைவு போன்றவற்றை கருத்தில் கொண்டு அவர்கள் மட்டும் வாகனங்களை உபயோகப்படுத்தலாம்)

# ஆலய வழிபாடு

1. ஆலயங்களுக்கு முடிந்தவரை தனியாகவோ, அல்லது குடும்பத்துடன் தான் செல்ல வேண்டும்
2. ஸாதுக்களுடனும், குருநாதருடனும் செல்வது உத்தமம். நண்பர்கள் (கதை பேசிக்கொண்டே), மற்றும் பொழுது போக்குபவர்களுடன் கோவிலுக்கு போகக்கூடாது.
3. கோவிலில் ஆங்காங்கே அமர்ந்து அரட்டை அடிக்கக் கூடாது.
4. கோவிலில் உறங்கக் கூடாது.
5. கோவிலில் உணவை வைத்துக் கொண்டு சாப்பிடக் கூடாது.
6. கோவிலில் தனியார் உணவுகள் சமைக்கக் கூடாது.
7. குளிக்காமல் ஆலயங்களுக்கு செல்லக்கூடாது.
8. படுக்கையில் பகலில் படுத்து எழுந்தாலும், பிறகு ஆலயங்களுக்குச் செல்லக் கூடாது.
9. ஆலயத்திற்குள் காலணிகளை கையில் தூக்கிக்கொண்டு நடக்க கூடாது.
10. ஆலயங்களுக்குள் போன் பேசக்கூடாது.
11. எச்சில் உமிழ்தல், சிறுநீர் கழித்தல் போன்ற அசுத்தங்கள் செய்யக்கூடாது. எச்சில் இலைகள், குப்பை இவைகளை கோவிலுக்குள் கொண்டு வந்து அசுத்தம் செய்யக் கூடாது.
12. கோவிலுக்குள் கழிப்பிடங்கள் கட்டக் கூடாது.
13. பெண்கள் வீட்டிற்கு விலக்கான நாட்களுக்கு கோவிலுக்கு போகக் கூடாது. அவர்களை தொட்டவர்களும் போகக்கூடாது.
14. வீட்டில் மரணம் நிகழ்ந்த தீட்டு இருக்கும்பொழுதும், குழந்தை பிறந்து தீட்டு இருக்கும்பொழுதும் கோவிலுக்கு செல்லக் கூடாது.
15. இறந்தவர்கள் வீட்டுக்கு சென்றுவிட்டோ, குழந்தை பிறந்த வீட்டிற்கு சென்றுவிட்டோ சரியாக ஸ்நானம் செய்யாமல் கோவிலுக்கு செல்லக்கூடாது.
16. ஆஸ்பத்திரிக்கு சென்றுவிட்டும் குளிக்காமல் கோவிலுக்கு செல்லக் கூடாது.
17. கோவிலுக்குள் மௌனமாக இருக்க வேண்டும். அல்லது



தினமும் மதியம் உபன்யாசம் இருந்தது





தினமும் மாலை
புறப்பாடு இருந்தது
சிம்ம வாகனத்தில் இருக்கும்
பிரேமிக வரதனுக்கு
தீபாராதனை

யானை வாகனத்தில்
பிரேமிக வரதன்





பேசும் பொற்சித்திரம் போல் விளங்கும் ஸ்ரீ ப்ரேமிக வரதனுடன் பேசுவது போல் ஸ்ரீ ஸ்வாமிஜியின் தோற்றம்!



நிகுஞ்சோத்சவ அலங்காரத்தில் ஸ்வாமி



நாம கோஷத்துடன் மாதுரிஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிக வரதனின் புறப்பாடு



ஒரு நாள் இரவு திவ்யநாம பஜனையில் பாகவதர்களுடன் ஸ்ரீ ஸ்வாமிஜி







ரதோத்ஸவ காட்சிகள்!



ராதா கல்யாணத்தன்று அன்பர்கள் கூட்டம் அலைமோதியது வானம் அனைவரும் பிரசாதம் பெறும் வரை, மேகமூட்டத்துடன் இருந்தது. சரியாக தீபாராதனையின் பொழுது சிறிது நேரம் மழை பொழிந்தது!



இறுதி நாளன்று ஆஞ்சநேய உற்சவம்
(கல்யாண ஸ்ரீநிவாச பெருமாள் கோவிலில் உள்ள ஆஞ்சநேயர்)